**கஹடகஸ்திகிலிய பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்படும் ரூபா 299,581 கூட்டுத்தொகையான 03 சொத்துக்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,144,595 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 410,808 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 159,710 மற்றும் ரூபா 246,468 தொகையான வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 நிலுவை குத்தகை வாடகை

06 ஆண்டுகளுக்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 592,618 தொகையான நிலுவை குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 தொலைதொடர்பு கோபுரங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 முத்திரைக் கட்டண வருமானம்**

2013 ,2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 1,606,680 தொகையான நிலுவை முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**03 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனித வள முகாமைத்துவம்**

சபை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 46 பேராக இருந்ததுடன் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர பதவியணியினர் 52 ஆக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 06 ஊழியர்களுக்கு மிகையொன்று காணப்படும் போது மீளாய்வாண்டின் போது 10 சமயாய சமய மற்றும் அமைய ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சபை நிதியத்திலிருந்து ரூபா 1,793,975 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இப்பணத்தை மீளளிப்பாக கிடைக்காததென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் சபையின் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2015 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மாணத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்து சபையின் முன்னால் தலைவர் மற்றும் உறுப்பினரொருவர் இரண்டு வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கு பங்குபெறச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக சபை நிதியத்தலிருந்து ரூபா 200,000 செலவிடப்பட்டிருந்தது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) மனித வளங்கள் முகாமைத்துவம்